III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP.7/2022

Deposition of witness for the Respondent/RW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 04-12-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : N.Gopal | Village | : |
| Father's Name | : Neelaperumal | Taluk | : |
| Age | : | Calling | : |

பிரமாண பத்திரத்தின் தொடர்ச்சியாக முதல் விசாரணை

நான் மனுவின் மூன்றாம் எதிர் மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். **எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.**

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

தேவராஜ் என்னிடம் 2-3 வருடங்களாக வேலை பார்த்து வந்தார். விபத்தின் போது எனது வாகனத்திற்கு காப்பீடு நிகழ்வில் இல்லை. விபத்திற்கு காரணம் எனது வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவும் தான் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் இரண்டு சக்கர வாகனத்தின் மீது எனது கார் மோதி அதன் பேரில் மனுதாரர் கீழே விழுந்து அவர் மீது லாரி மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. விபத்திற்கு காரணம் கார் மற்றும் லாரி ஓட்டுநர்களின் கவனக்குறைவும் தான் என்றும் ஆதலால் அந்த இரு வாகனங்களின் உரிமையாளர்களும் இழப்பீடு தரவேண்டும் என்றும் எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லாத காரணத்தினால் நான் பொய்யான தகவல்களை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**(**இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**.)**